# தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் சென்னை–18

## ஒட்டுமொத்த தேர்தல் 2023

## மாநில தேர்தல் அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

## நாள்:20.09.2023

# ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023

- தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 15 இதர செயற்பதிவாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் மொத்தம் **23,149** அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.
- இதில் 2018 ஒட்டுமொத்த தேர்தலில் முதற்கட்டம் முதல் நிலையில் (Stage I) தேர்தல் முடிவுற்று 02.04.2023 அன்று 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிவுற்ற சுமார் 4,189 சங்கங்கள்,
- இவை தவிர, புதிதாக பதிவுசெய்யப்பட்ட 615 சங்கங்கள், செயலாட்சியர் கட்டுப்பாட்டிலுள்ள 1658 சங்கங்கள் மற்றும் புத்துயிரூட்டப்பட்ட 277 சங்கங்கள் மற்றும் ஏற்கனவே 5 ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்த 239 என மொத்தம் 6978 சங்கங்களின் பட்டியல் ஆணையத்தில் பெறப்பட்டது.
- மேலும் முதற்கட்டத்தில் (Phase I) வரும் 2,3 மற்றும் 4 நிலைகளிலுள்ள (Stage 2,3,4) சங்கங்களின் 5 ஆண்டுகள் பதவிக்காலம் முறையே 05.08.2023 மற்றும் 06.08.2023 ஆகிய தேதிகளில் முடிவடைந்த சுமார் 13,333 சங்கங்கள் என மொத்தம் 20,311 சங்கங்களுக்கு ஆணையம் தேர்தல் நடத்தவுள்ளது.

# தேர்தல் நடத்தபெற வேண்டிய மொத்த சங்கங்களின் எண்ணிக்கை (Tentative)

| | | |
|---|---|---|
| 1 | ஒட்டுமொத்த தேர்தல் 2018–ன் முதற்கட்டம் முதல் நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களின் 5 ஆண்டு பதவிக்காலம் 02.0.4.2023–ல் முடிவடைந்த சங்கங்கள் | 4189 |
| 2 | புதிதாக பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் | 615 |
| 3 | செயலாட்சியர் பொறுப்பில் உள்ள சங்கங்கள் | 1658 |
| 4 | புத்துயிரூட்டப்பட்ட சங்கங்கள் | 277 |
| 5 | 5 ஆண்டுகள் பதவிக்காலம் ஏற்கனவே முடிவுற்ற சங்கங்கள் | 239 |
| 6 | ஒட்டுமொத்த தேர்தல் 2018–ன் முதற்கட்டம் 2,3 மற்றும் 4 நிலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுக்களின் 5 ஆண்டு பதவிக்காலம் முறையே 05.0.8.2023 மற்றும் 06.08.2023–ல் முடிவடைந்த சங்கங்கள் (Tentative) | 13,333 |
| | **மொத்தம்** | **20,311** |

# மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான நீதிப்பேராணை எண் 5171/2023

- கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலில், சங்க உறுப்பினர்களின் ஆதார் எண் சேர்த்தல், குடும்ப அட்டை எண் சேர்த்தல் மற்றும் இறந்த உறுப்பினர்களின் பெயர்களை நீக்குதல் போன்றவற்றை முழுமையாகச் சரிசெய்த பின்னரே, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்திட வேண்டும் என்றும், அதற்கான உரிய ஆணை வேண்டியும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பாக **நீதிப்பேராணை மனு எண் 5171/2023** தாக்கல் செய்யப்பட்டது.

# மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான நீதிப்பேராணை எண் 5171/2023

- இம்மனு மீது விசாரணை மேற்கொண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல்களை சரி செய்திட அரசுக்கு ஆறுமாதகால அவகாசம் வழங்கியும், அதன் பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை ஆணையம் நடத்திட வேண்டும் என்றும் 28.04.2023 அன்று ஆணை வழங்கியது.

## மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான நீதிப்பேராணை எண் 5171/2023

## ஆணையத்தின் கடிதம் ந.க.773/2023/கூதே1 நாள் 14.06.2023

- இக்கால அவகாசமானது, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணை தேதியான 28.04.2023 தேதியிலிருந்து தொடங்குகிறது என்பதை தெரிவித்தும், 27.10.2023–க்குள் தங்களது நிர்வாகப் பொறுப்பிலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியல்களில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்திடுமாறும், 27.10.2023–க்கு பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை ஆணையம் நடத்திடும் வகையில், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையத்தால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் இதர செயற்பதிவாளர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# உறுப்பினர் பட்டியல் சரிசெய்யும் பணியினை ஆணையத்தின் சார்பில் ஆய்வு செய்தல்

- மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை எண் W.P.No 5171/2023 மீதான 28.04.2023 தீர்ப்பாணையின்படி கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலை சரிசெய்யும் இப்பணியின் தற்போதைய நிலையினை அறிந்திட, 1983 –ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பிரிவு 33(11)(b) கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் அனைத்திற்குமான வாக்காளர் பட்டியல்களை தயாரிப்பது மற்றும் தேர்தல்கள் நடத்துவது, கண்காணிப்பது ஆகியவற்றிற்கு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ள ஆணையம் முடிவுசெய்தது.

# உறுப்பினர் பட்டியல் சரிசெய்யும் பணியினை ஆணையத்தின் சார்பில் ஆய்வு செய்தல்

- செயலாளர்/கூடுதல் பதிவாளர், சிறப்பு பணி அலுவலர்/இணைப்பதிவாளர் (ஓ), கூட்டுறவுச் சார்பதிவாளர், முதுநிலை ஆய்வாளர் கொண்ட ஆணையத்தின் அலுவலர்களின் குழுவானது, கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலை 30.08.2023 முதல் 21.09.2023 வரை ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டு அவ்விவரம் அனைத்து துறைகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.
- இந்த ஆய்வின் போது உறுப்பினர் பட்டியல் தொடர்பான ஆணையத்தின் சுற்றறிக்கையில் உள்ள விவரங்கள், 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள், விதி எண் 52(7)–ன்படி சங்க உறுப்பினர்களின் பட்டியலில் இருக்க வேண்டிய இனங்கள் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட விவரங்கள் ஆகியவை சங்கங்களால் செயல்படுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது

## உறுப்பினர் பட்டியல் சரிசெய்யும் பணியினை ஆணையத்தின் சார்பில் ஆய்வு செய்தல்

மேலும் கீழ்கண்ட விவரங்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவை பின்வருமாறு:

1. அங்கத்தினர்களின் ஆதார் மற்றும் குடும்ப அட்டை விவரங்களை அங்கத்தி னர்கள் பட்டியலில் சேர்த்தல்
2. சங்கத்துணை விதிகளில் கூறப்பட்டுள்ளபடி தகுதியில்லாத உறுப்பினர்களை நீக்குதல்
3. விதி 28–A இல் குறிப்பிடப்பட்டபடி இறந்து போன உறுப்பினர்களை நீக்குதல்
4. சங்க விவகார எல்லையிலிருந்து வெளியில் சென்ற/வசிப்பிடம் மாற்றியவர்களின் உறுப்பினர் பெயர் நீக்குதல்
5. நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு பங்குத்தொகை செலுத்தாதவர்களின் பெயர் நீக்குதல்
6. 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் விதி எண் 52(7)(b)(i) மற்றும் (ii) விதி 52(7)(e) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட விவரங்கள் உறுப்பினர் பட்டியலில் இருத்தல்
7. சட்ட விதிகளில் கூறப்பட்டுள்ளபடி உறுப்பினர் சேர்க்கை தொடர்பான ஆவணங்கள் இல்லாதது/ சரிவர இல்லாத இனங்கள் போன்றவற்றை சரிசெய்தல் ஆகியவை.

# ஆணையத்தின் சார்பில் ஆய்வு மேற்கொள்ளுதல் – பயணத் திட்டம்

| நாள் | மாவட்டம் | ஆய்வு மேற்கொள்ளப்பட்ட சங்கத்தின் நிர்வாகத் துறை |
|---|---|---|
| 30.08.2023 | திருவள்ளூர் | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை |
| 30.08.2023 | சென்னை | கூட்டுறவுத் துறை (வீட்டுவசதி) |
| 31.08.2023 | காஞ்சிபுரம் | கைத்தறித் துறை |
| 31.08.2023 | திருவண்ணாமலை | பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை |
| 04.09.2023 | திருநெல்வேலி | ஒருங்கிணைந்த குழந்தை திட்ட வளர்ச்சிப்பணிகள் துறை |
| 05.09.2023 | தென்காசி | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் |
| 07.09.2023 | திருச்சிராப்பள்ளி | தொழில் வணிகத்துறை |
| 07.09.2023 | புதுக்கோட்டை | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம் |
| 08.09.2023 | தஞ்சாவூர் | பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை |
| 11.09.2023 | மதுரை | கூட்டுறவுத் துறை |
| 11.09.2023 | தேனி | கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் துறை |
| 12.09.2023 | விருதுநகர் | பட்டு வளர்ச்சி துறை |
| 12.09.2023 | சிவகங்கை | சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை |
| 15.09.2023 | கோயம்புத்தூர் | கூட்டுறவுத் துறை (வீட்டுவசதி) |
| 16.09.2023 | சேலம் | கூட்டுறவுத் துறை |
| 16.09.2023 | நாமக்கல் | கைத்தறி துறை |
| 21.09.2023 | இராமநாதபுரம் | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை |

## உறுப்பினர் பட்டியல் சரிசெய்யும் பணியினை ஆணையத்தின் சார்பில் ஆய்வு செய்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியல் சரிசெய்யும் பணியினை ஆணையத்தின் சார்பில் ஆய்வு செய்ததில் கீழ்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டன. அவை பின்வருமாறு

1. சங்கங்களின் உறுப்பினர் பட்டியலில் ஆதார் எண் மற்றும் குடும்ப அட்டை எண் சேர்த்தல் சுமார் 20% மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன.
2. சங்க உறுப்பினர் பதிவேடு சரிவர பராமரிக்கப்படவில்லை.
3. சங்க பதிவேடுகள் மற்றும் இதர சங்க ஆவணங்களில் உறுப்பினர், சங்க தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரின் கையொப்பங்கள் இல்லை.
4. ஆதார் எண் மற்றும் குடும்ப அட்டை எண் சேர்த்தல் பற்றிய விவரம் உறுப்பினர்களுக்கு சரிவர சங்கத்தால் தெரியப்படுத்தப்படவில்லை.
5. புதிய உறுப்பினர்களைச் சங்கத்தில் சேர்த்திட சங்கத்தால் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

# கூட்டுறவுத் தேர்தல் 2023 (உத்தேச பட்டியல்)

| சங்கங்களின் எண்ணிக்கை | கட்டம் | துறை |
|---|---|---|
| **1 முதல் 200** வரையிலான சங்க எண்ணிக்கை உள்ள துறைகள்<br><br>(1 – 200) | ஒரே கட்டமாக<br><br>(In a Single phase) | 1. ஒருங்கிணைந்த குழந்தை திட்ட வளர்ச்சிப் பணிகள் துறை<br>2. பட்டு வளர்ச்சி துறை<br>3. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை<br>4. சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை |
| **200 முதல் 1000** வரையிலான சங்க எண்ணிக்கை உள்ள துறைகள்<br><br>(200–1000) | இரண்டு கட்டங்களாக<br><br>(In Two Phases) | 1. கைத்தறி துறை<br>2. தொழில் வணிகத் துறை<br>3. கூட்டுறவுத் துறை (வீட்டுவசதி)<br>4. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம்<br>5. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் |
| **1000 மற்றும் அதற்கு மேற்பட்ட** சங்க எண்ணிக்கை உள்ள துறைகள்<br><br>(1000 and Above) | மூன்று கட்டங்களாக<br><br>(In Three Phases) | 1. கூட்டுறவுத் துறை<br>2. பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை<br>3. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை |

# கடந்த 2018 தேர்தலில் நடைபெற்ற தவறுகள்

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மாண்பமை மதுரை அமர்வு, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை தலைவர்களாகக் கொண்ட சிறப்பு மண்டலக் குழுக்கள் முன்பாக 2018 தேர்தல் நடவடிக்கை தொடர்பான மனுக்கள், புகார்கள் மற்றும் தீர்ப்புகள்**

- கடந்த 2018 கூட்டுறவுச் சங்க தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக **மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மாண்பமை மதுரை அமர்வு ஆகியவற்றின் முன்பாக 1706 ரிட் மனுக்கள் (Writ Petitions**) தாக்கல் செய்யப்பட்டன.
- இவை தவிர, மாண்பமை ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை தலைவர்களாகக் கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான 4 சிறப்பு மண்டலக்குழுக்கள் முன்பாகவும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

- ஆணையத்தால் நேரடியாக தேர்தல் நடவடிக்கைகள் குறித்து **5,688 புகார் மனுக்களும்** பெறப்பட்டன.
- மாண்பமை உயர்நீதிமன்றங்களும், மண்டலக் குழுக்களும் புகார்களின் தன்மையை நன்கு பரிசீலித்து, பல இனங்களில் தேர்தல் அலுவலர்களின் தேர்தல் நடவடிக்கைகளை கடுமையாக கண்டனம் செய்தும், விமர்சித்தும், தேர்தலை இரத்து செய்தும், தேர்தல் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் தீர்ப்பாணைகள் வழங்கியுள்ளன.

# தேர்தல்  ஆணையத்தில் பெறப்பட்ட புகார்களின் தன்மைகள்

## (Nature of Complaints)

ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 1111/2022/கூதே5, நாள் 20.10.2022

மாண்பமை உயர்நீதிமன்றம், மண்டலக்குழுக்கள் முன்பான மனுக்கள் மற்றும் ஆணையத்தினால் நேரடியாக பெறப்பட்ட மனுக்களில் கூறப்பட்டுள்ள அனைத்து வகைப் புகார்களும் மூன்றாக வகைப்படுத்தலாம். அவை:

1. உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் தொடர்புடையது (Member/Voter list)
2. வேட்புமனு தாக்கல் தொடர்புடையது (Filing of Nomination)
3. வேட்புமனு பரிசீலனை தொடர்புடையது (Scrutiny)

## I. உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் தொடர்புடையது

- உறுப்பினர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- வாக்காளர் பட்டியல் அலுவலர் வரவில்லை.
- உறுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை.
- போலியான மற்றும் தகுதியற்ற, உறுப்பினர்கள் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.
- கோருரிமை மற்றும் மறுப்புகள் பெறப்படவில்லை,

- இறுதி வாக்காளர் பட்டியல் அறிவிப்பு பலகையில் ஒட்டப்படவில்லை.
- உறுப்பினர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளது.
- இறந்த உறுப்பினர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை.
- சங்க செயல் எல்லை (area of operation) யில் வசிக்காத / தொழில் செய்யாத / விவசாய நிலம் இல்லாத உறுப்பினர்கள் சங்கத்துணை விதிக்கு புறம்பாக உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருத்தல்.

## II. வேட்புமனு தாக்கல் தொடர்புடையது

- வேட்புமனு நடவடிக்கைக்கான தேர்தல் அலுவலர் தேர்தல் அறிவிப்பின்படியான நாளில், இடத்தில், நேரத்தில் இல்லை.
- வேட்புமனு படிவம் (Form No.18) தரமறுத்தல்.
- குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டுமே வேட்பு மனு வழங்கப்படுதல்.
- தட்டச்சு, ஒளிநகல், கைப்பட எழுதுதல், பதிவிறக்கம் செய்யப்படுதல் போன்ற வகைகளில் உள்ள படிவம்–18ஐ ஏற்க மறுத்தல்.
- வேட்புமனு பெற மறுத்தல்.
- குறிப்பிட்ட நபர்களிடமிருந்து, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே வேட்பு மனுக்கள் பெறப்படுதல்.

## III. வேட்புமனு பரிசீலனை தொடர்புடையது

- அறிவிப்பின்படியான பரிசீலனைக்கான நாள், இடத்தில், நேரத்தில் தேர்தல் அலுவலர் இல்லை.
- வேட்புமனு தாக்கல் கையொப்பம் சரியில்லை, தொகுதி சரிவர நிரப்பப்படவில்லை, உறுதி மொழியினை அடிக்கவில்லை, வேட்புமனு சரிவர நிரப்பப்படவில்லை, உறுப்பினர் எண் சரியாக இல்லை மற்றும் இது போன்ற அற்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்படுதல்.
- வேட்பாளர்களுக்கு நிராகரிப்பதற்கான காரணங்கள் தெரிவிக்காமல் இருத்தல்.

- வேட்பு மனுத்தாக்கலுக்கு ஒப்புகை சீட்டு வழங்கவில்லை.
- வேட்புமனுதாக்கலுக்கு குறிப்பிட்ட நபர்களைத் தவிர வேறு எவரும் அனுமதிக்கப்படவில்லை.
- காவல்துறை பாதுகாப்பு போதுமான அளவு ஏற்பாடு செய்யப்படவில்லை.
- வீடியோ (Video Coverage) ஏற்பாடு இல்லை.
- வேட்பு மனு தாக்கலின் போது உண்மை நிலவரத்திற்கு மாறாக (Contrary to facts and circumstances) சட்ட ஒழுங்கினைக் காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்துதல்.

- வேட்பாளர்களுக்கு அனைத்து வேட்பு மனுக்களையும் பார்வையிட்டு அதை சரியானதுதான் என்று அறிந்து கொள்ளும் வகையில் நியாயமான எவ்வித உதவியும் செய்யாமல் இருத்தல்.
- குறிப்பிட்ட நபர்களின் வேட்புமனுக்கள் மற்றும் அவை சரியாக இல்லாத நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படுதல்.
- குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுதல்.
- தேர்தல் அலுவலர் சில வேட்பு மனுக்களில் தாங்களாகவே திருத்தம் மேற்கொண்டு அவற்றை நிராகரித்தல்.

- தேர்தல் அலுவலரால் படிவம் 20–ல் வேட்பாளர் பட்டியல் முறையாக வெளியிடப்படாமல் இருத்தல்.
- இம்மாதிரியான புகார்கள் இனியும் தொடரா வண்ணம், தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டும்.
- இந்த அறிவுரைகளை மீறுபவர்கள் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

# ஆரம்ப கட்ட நடவடிக்கைகள்
# (Preliminary Arrangements)

## ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 825/2022/கூதே2(1), நாள் 29.08.2022

- கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 15 இதர செயற்பதிவாளர்களிடமிருந்து தேர்தல் நடத்த வேண்டிய சங்கங்களின் பட்டியல் பெறுதல்.
- தொடக்க கூட்டுறவு, மத்திய கூட்டுறவு மற்றும் தலைமை கூட்டுறவுச் சங்கங்களுக்கான 3 அடுக்குமுறை தேர்தல் நடத்த, தேர்தல் திட்டம் தயாரித்தல்.
- உறுப்பினர் பட்டியல், வாக்காளர் பட்டியல் – சங்கங்கள் சரியான முறையில் தயாரித்தலை ஒழுங்குப்படுத்துதல்.

- தேவைப்படும் வாக்குப்பதிவு மையங்களின் எண்ணிக்கை, அதற்கான இடங்கள் போன்றவற்றை முன்கூட்டியே திட்டமிடல்.

- தேர்தல் நடத்துவதற்கு சங்கத்திற்குத் தேவைப்படும் வாக்குப்பெட்டிகள், வாக்குச்சீட்டுகள் மற்றும் தேவையான இதர பொருட்கள் (Polling Materials) தேவையினை அறிதலும், அதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைத்தலும்.

- மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குதல்.

- தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களுக்கும் தேர்தல் நடத்துவது தொடர்பான பயிற்சியினை அளித்தல்.

# சங்கத்துணை விதி திருத்தங்கள் மேற்கொள்ளுதல் (By–law amendments)

## ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 875/2022/கூதே2(2), நாள் 29.08.2022

- பல சங்கங்களில் தேர்தல் தொடர்பான துணைவிதிகள் 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின்படி இல்லை.

- உறுப்பினர் சேர்க்கைக்கான தகுதிகள், உறுப்பினர் சேர்த்தல், நீக்குதல், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அமைப்பு (Constitution) போன்றவை தொடர்பாக சட்ட விதிகளை அனுசரித்து துணைவிதி திருத்தங்கள் (By–law amendments) மேற்கொள்ளப்படவில்லை.

- இது போன்ற காரணங்களினால் சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் மாண்பமை நீதிமன்றங்களில் ரத்து செய்து ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

- இவற்றிற்கு மீண்டும் தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் சங்கங்கள் கூடுதல் செலவினங்கள் மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

- இதனால் ஏற்கனவே தேர்தல் நடவடிக்கைக்காக செலவிடப்பட்ட மனித சக்தி, நேரம், பணச் செலவு (Man power, Time, Cost) மற்றும் நீதிமன்ற வழக்கு செலவு ஏற்படுகிறது.

# உறுப்பினர் பட்டியல் சரிசெய்தல் (Purification of Electoral Rolls)

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 875/2022/கூதே2(3), நாள் 29.08.2022**

- வாக்காளர் பட்டியலுக்கு அடிப்படை உறுப்பினர் பட்டியல் (Member list) ஆகும்.
- வாக்காளர் பட்டியல் சரிவர தயாரிக்கப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக சில சங்கங்களின் தேர்தல் நடவடிக்கைகள் மாண்பமை உயர் நீதிமன்றங்களால் இரத்து செய்யப்பட்டன.

# <u>உறுப்பினர் பட்டியல் சரிசெய்தல்</u>

# <u>(Purification of Electoral Rolls)</u>

- கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலில் உறுப்பினர்களின் ஆதார் எண் சேர்த்தல், குடும்ப அட்டை எண் சேர்த்தல் மற்றும் இறந்த உறுப்பினர்களின் பெயர்களை நீக்குதல் போன்றவற்றை முழுமையாகச் சரிசெய்த பின்னரே கூட்டுறவு சங்கத் தேர்தல்களை நடத்திட வேண்டும் என்றும், அதற்கான உரிய ஆணை வேண்டியும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பாக **நீதிப்பேராணை மனு எண் 5171/2023** தாக்கல் செய்யப்பட்டது.
- இம்மனு மீது விசாரணை மேற்கொண்ட **மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல்களை சரி செய்திட அரசுக்கு ஆறுமாதகால அவகாசம் வழங்கி ஆணையிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.**

**வாக்காளர் பட்டியல் சரிவர தயாரிக்கப்படவில்லை என்று கூறப்பட முக்கிய காரணங்கள்:**

- இறந்த உறுப்பினர்களின் பெயர்கள் நீக்கப்படாதது.
- சங்கத்தின் துணைவிதிப்படி தகுதி இல்லாதவர்கள் உறுப்பினர்களாக உள்ளது.
- சட்ட விதிகளில் கூறப்பட்டபடி உறுப்பினர் சேர்க்கை தொடர்பான ஆவணங்கள் இல்லாதது.
- ஒவ்வொரு சங்கமும் தனது உறுப்பினர் பட்டியல், அது தொடர்பான விண்ணப்பப் படிவங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் (Registers and Records) எத்தேதியிலும் ஒழுங்காக பராமரித்தலை அதற்கு பொறுப்பான அலுவலர்கள் உறுதி செய்தல்.

# தேர்தலுக்கான நடத்தை விதிகள்
# (Code of Conduct)

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 344/2018/கூதே5, நாள் 05.09.2022 மற்றும் 11.01.2023**

- தேர்தல் நடத்தை விதிகளானது தேர்தல் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு திட்டம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் முடிவுற்று புதிய நிர்வாகக்குழு பதவியேற்கும் நாள்வரை அமலில் இருக்கும்.
- தேர்தலின்போது நடத்தை விதிகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை என்று புகார்கள் ஆணையத்தில் பெறப்படுகின்றன.
- ஆணையத்தால் சங்க நிர்வாகத்திற்கு வழங்கப்பட்ட சட்டப்பூர்வ கட்டளைகளை செயல்படுத்தாது இருப்பது சட்டப்பிரிவு 157–ன் கீழ் சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கக்கூடிய குற்றமாகும்.

## தேர்தலுக்கான நடத்தை விதிகள் (Code of Conduct)

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 344/2018/கூதே5, நாள் 05.09.2022 மற்றும் 11.01.2023**

- சட்டப்பிரிவு 162-ன் கீழ் ஓராண்டு வரை சிறைத் தண்டனை மற்றும் ரூ.10,000/- வரை அபராதம் (Fine) விதிக்கக்கூடிய குற்றமாகும்.
- மேற்காண் ஆணைய கடிதத்தில் தேர்தல் நடத்தை விதிகள் தேர்தல் திட்டம் வழங்கப்பட்டுள்ள தொடக்க, மத்திய, தலைமை போன்ற அனைத்து வகை சங்கங்களுக்கும் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட நடத்தை விதிகள் பொருந்துவதாகும்.
- எனவே தேர்தல் நடத்தை விதிகள் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும்.

# மாநிலத் தேர்தல் அலுவலர்கள் நியமனம்

## ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 875/2022/கூதே1(1), நாள் 12.09.2022

1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 3–ன் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்களாக அரசால் நியமனம் செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (Registrar of Cooperative Societies) மற்றும் செயற்பதிவாளர்களை (Functional Registrars), அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் (இனி வரும் இடங்களில் விதி எனப்படும்) விதி எண் 52–A(3)–ன் கீழ் மாநிலத் தேர்தல் அலுவலர்களாக (State Election Officers) தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் நியமனம் செய்துள்ளது.

# 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பிரிவு 3-ன் கீழ் பதிவாளர்களாக (Registrars) நியமனம் செய்யப்பட்டுள்ள அரசு துறைத் தலைவர்கள்

| வ.எண் | துறை (Department) | பதவி (Designation) |
|---|---|---|
| 1 | கூட்டுறவுத் துறை | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் |
| 2 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை |
| 3 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை | ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை |
| 4 | கைத்தறி துறை | ஆணையர், கைத்தறி துறை |
| 5 | துணிநூல் துறை | ஆணையர், துணிநூல் துறை |
| 6 | வீட்டு வசதி துறை | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) |
| 7 | தொழில் வணிகத்துறை | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் |
| 8 | தமிழ்நாடு கதர் மற்றும் குடிசை தொழில் வளர்ச்சி வாரியம் | தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் குடிசை தொழில் வளர்ச்சி வாரியம் |
| 9 | கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் துறை | இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் துறை |
| 10 | தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் |
| 11 | வேளாண்மைத்துறை | ஆணையர், வேளாண்மைத்துறை |
| 12 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | இயக்குநர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை |
| 13 | பட்டு வளர்ச்சி துறை | இயக்குநர், பட்டு வளர்ச்சி துறை |
| 14 | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் துறை | இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் துறை |
| 15 | சர்க்கரைத் துறை | ஆணையர், சர்க்கரைத் துறை |
| 16 | ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் துறை | இயக்குநர், ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் துறை |

# மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் நியமனம்

## ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை
## ந.க.எண் 875/2022/கூதே1(2), நாள் 12.09.2022

- மேற்கூறிய செயல்முறை ஆணையில் கண்டுள்ளபடியான அலுவலர்கள், மாவட்ட/சரக அளவிலான கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மாவட்ட தேர்தல் அலுவலர்களாக (District Election Officers) தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் நியமனம் செய்துள்ளது.
- புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களுக்கான, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் பொறுத்த வரையில் ஏற்கனவே நடைமுறையில் இருந்த நிலையையே தொடரலாம்.

| வ.எண் | துறை | மாவட்ட தேர்தல் அலுவலர்களின் (DEO) எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கூட்டுறவுத் துறை | 73 |
| 2 | பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | 35 |
| 3 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை | 46 |
| 4 | கைத்தறி துறை | 20 |
| 5 | துணிநூல் துறை | 4 |
| 6 | வீட்டு வசதி துறை | 11 |
| 7 | தொழில் வணிகத்துறை | 38 |
| 8 | தமிழ்நாடு கதர் மற்றும் குடிசை தொழில் வளர்ச்சி வாரியம் | 18 |
| 9 | கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் துறை | 71 |
| 10 | தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | 18 |
| 11 | வேளாண்மைத் துறை | 31 |
| 12 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | 38 |
| 13 | பட்டு வளர்ச்சி துறை | 13 |
| 14 | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப் பணிகள் துறை | 20 |
| 15 | சர்க்கரைத் துறை | 17 |
| 16 | ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் துறை | 13 |

## தேர்தல் தொடர்பான பல்வேறு அலுவலர்களின் சட்டப்பூர்வ கடமைகளும் பொறுப்புகளும் – அறிவுரைகள் வழங்குதல்

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 897/2022/கூதே5, நாள் 26.09.2022**

மாநிலத் தேர்தல் அலுவலர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் பார்வையாளர்கள், தேர்தல் அலுவலர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சட்டபூர்வ கடமைகளை ஆணையத்தால் அறிவுறுத்திய வண்ணம் தவறாமல் செயல்படுத்துவதை உறுதி செய்தல் வேண்டும்.

## ஒழுங்கு நடவடிக்கை

- தேர்தல் பணிகள் தொடர்பான தங்களுக்கேற்பட்ட சட்டபூர்வ கடமைகளை செய்ய மறுக்கும், செய்யத்தவறும், செய்யாமலிருக்கும், தவறுதலாகச் செய்யும் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையும் (Disciplinary action) மற்றும் குற்றச் செய்கைகள் (Criminal offences) மேற்கொள்ளப்பட்டதாக முதன் நோக்கில் (Prima facie) தெரியவரும் நிலையில் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்வது குறித்து பரிசீலித்து குற்ற செய்கைகளின் அளவினையும் தன்மையையும் வகைப்பாட்டினையும் (Extent, gravity, classification) கருத்திற்கொண்டு அதற்கேற்ற ஒழுங்கு நடவடிக்கைகள் எவ்விதத் தயக்கமுமின்றியும், விருப்புவெறுப்புமின்றியும் உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

**மேலே சொல்லப்பட்டபடியான ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான முறைகேடுகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்:**

- கடமை தவறிய, (Dereliction of duty), நடத்தை தவறிய (Grave misconduct), கீழ்ப்படியாமை (Insubordination) போன்ற பெருந்தண்டனைக்குரிய குற்றங்களாக (Major Punishment) கண்டறியப்படுபவை தொடர்பாக குற்றத்தின் தன்மைக்கேற்ப அரசு துறை சார்ந்த அலுவலர்களாக இருப்பின் 1973–ம் ஆண்டு தமிழ்நாடு குடிமைப் பணிகள் விதிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) [(Tamil Nadu Civil Services) (Discipline and Appeal) Rules, 1973)] கீழும் இதர நிறுவனங்களாக இருப்பின் அவர்கள் சார்ந்த நிறுவனத்தின் ஊழியர் பணி விதிகள்படியும் நடவடிக்கை எடுக்கவும்;
- கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கு (Direction) கீழ்படியாமை (Disobedience) குறித்து சட்டப்பிரிவு 157–ன் கீழ் நடவடிக்கை எடுக்கவும்;

- ஒழுங்கீன செய்கைகள் (Corrupt practices) குறித்து சட்டப்பிரிவு 162–ன் கீழ் குற்றவியல் நடவடிக்கை தொடரவும்;
- உள்நோக்குடன் ஆவணங்களைப் பொய்யாக்குதல் மற்றும் மோசடியாகத் திருத்துதல் (Forgery, Falsifications, Manipulations of records fraudulently with malafide intention) போன்ற குற்றச் செய்கை இருப்பின் அதற்காக இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும்;
- தேர்தல் அலுவலரின் தவறான நடவடிக்கை உடனடியாக சரிசெய்யப்பட வேண்டிய நேர்வுகளில், சம்பந்தப்பட்ட அலுவலரை குற்றச்சாட்டு முனைவதை முன்னிறுத்தி (in contemplation of charges) பணி இடை நீக்கம் (Suspend) செய்தும், இதனால் தேர்தல் நடவடிக்கை தடைபடாது தொடர்ந்து நடத்திட மாற்று ஏற்பாடு செய்தும், அதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களால் (Competent authority) ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

## விதி எண்.52(18)(a) மற்றும் 53(11) (a)–ன் கீழ் சட்ட ஒழுங்கு எனக்காரணம் காட்டி தேர்தலை நிறுத்துதல்.

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 1153/2020/கூதே3, நாள் 26.09.2022**

- விதி எண். 52(18)(a) மற்றும் 53(11)(a)–ன் கீழ் கலகம் அல்லது வெளிப்படையான வன்முறை தேர்தல் நடவடிக்கைகள் எந்த நிலையிலாவது குறுக்கீடு செய்யப்பட்டாலோ அல்லது தடுக்கப்பட்டாலோ என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது.
- தேர்தல் நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில் அவ்வகை சம்பவங்கள் ஏற்பட்டால் மட்டுமே (only at the time) தேர்தல் அலுவலர் தேர்தலை நிறுத்தலாம்.
- அம்மாதிரி சம்பவங்கள் நிகழப்போவதாக எண்ணியோ அல்லது அச்சத்தினாலோ தேர்தலை நிறுத்த அதிகாரம் வழங்கப்படவில்லை.

- கடந்த 2018 தேர்தலில் இது போன்ற 115 சங்கங்களின் தேர்தல்கள் நிறுத்தப்பட்டது கவலை அளிக்கிறது.
- இனியும் இந்த நிலை தொடரக் கூடாது என ஆணையம் தெரிவிக்க விரும்புகிறது.
- அற்ப காரணங்களைக்காட்டி தேர்தல் நிறுத்துவது மிகவும் கண்டனத்திற்குரியதும் ஏற்று கொள்ள இயலாததுமாகும்.
- தேர்தல் நடவடிக்கை விதி எண். 52(18)(a) மற்றும் 53(11)(a)–ன் கீழ் நிறுத்தப்பட்டுள்ள விபரம் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.
- மீறும் தேர்தல் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

# உரிய பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் (Sufficient Police Bandobast /Protection)

## ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 980/2022/கூதே5,

## நாள் 06.10.2022

- கடந்த 2018 ஒட்டுமொத்த தேர்தல்களில் சட்டம் ஒழுங்கு காரணம் காட்டி மிக சாதாரணமாக தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.
- வேட்புமனு தாக்கலின்போது ஒழுங்குபடுத்தப்படாத கூட்டம், தேர்தல் அதிகாரியிடமிருந்து தேர்தல் ஆவணங்களை பறிப்பது, கிழிப்பது போன்றவை.
- காவல்துறையினரால் சட்ட ஒழுங்கு (Law & Order) பிரச்சினை ஏற்படும் என வாய்மொழியாக அறிவுறுத்தியதின்படி தேர்தல் நிறுத்தப்பட்டது.

- இதுபோன்ற நிகழ்வுகளை நீதிமன்றங்கள், மண்டலகுழுக்கள் ஆகியவை கடுமையாக விமர்சித்துள்ளன என்பதை தெரியப்படுத்துதல்.
- அனைத்து தேர்தல் நடவடிக்கைகளுக்கும் போதிய பாதுகாப்பு வழங்கிட காவல்துறை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.
- மிகச் சாதாரணமாக சட்டம் மற்றும் ஒழுங்கு காரணம் காட்டியும், எதிர்நோக்கியும் தேர்தலை நிறுத்துதல் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.
- சட்ட ஒழுங்கு காரணமாக தேர்தல் நிறுத்தப்படும் இனங்களில் அங்கு அப்போது பணியில் இருந்த காவலர்கள் மீது பணியிடைநீக்கம் போன்ற ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட DGPக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## **கூட்டுறவு சங்கத்தின் பணியாளர்கள், அதிகாரிகளை தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்தல் – தொடர்பாக.**

**ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.எண் 1157/2022/கூதே5, நாள் 03.11.2022**

- மாவட்டத் தேர்தல் அலுவலர், சங்கத்தில் பணியாற்றுபவர்களின் பணிநிலை எதுவாக இருந்தாலும் அவர்களை தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தம் செய்கிறார்கள்.

- இவ்வாறு நியமிக்கப்படும் தேர்தல் அலுவலர்களின் நடவடிக்கை குறித்து புகார்களும், வழக்குகளும் ஆணையம் எதிர் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகிறது. எனவே அவ்வாறான நியமனங்களை மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கண்டிப்பாக தவிர்த்தல் வேண்டும்.
- அரசு அலுவலர்கள் போதுமான அளவில் இல்லாத நிலையில் மட்டுமே சங்கப் பணியாளர்களை தேர்தலில் ஈடுபடுத்த வேண்டும்.

- விதி எண்.52–(3)(a)–ன் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களை மற்றும் அதிகாரிகளை (Employees and Paid Officers) தேர்தல் அலுவலர்களாக மாவட்டத் தேர்தல் அலுவலர் நியமனம் செய்வது தொடர்பாக விதி எண்.52–A (9) மற்றும் (10) – ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை கைக்கொண்டு கீழ்வரும் அறிவுரைகளை ஆணையம் வழங்குகிறது :

- போதுமான அளவு அரசு அலுவலர்கள் (Officers of the Government or Officers Subordinate to the District Election Officer) இல்லாத நிலையில் மட்டுமே சங்கப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளை தேர்தல் அலுவலர்களாக பணியமர்த்தலாம்.

- மாவட்டத் தேர்தல் அலுவலரால், தேர்தல் அலுவலராக பணியமர்த்தம் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் (Employees and Officers) :–

- செயலாளர்கள் (Secretaries), உதவி செயலாளர்கள், நிர்வாக அலுவலர்கள் (Executive officers), உதவி நிர்வாக அலுவலர்கள், மேலாளர்கள் (Managers), உதவி மேலாளர்கள் ஆகிய வகை (Category of posts) பதவிகளில் உள்ளவர்கள் மற்றும் அவ்வகைப் பதவிகளுக்கு குறையாத வகை (Not below such category of posts) பதவிகளில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

- காலமுறை ஊதியம் உள்ள பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும் (A post carrying a definite scale of pay).

- சங்கத்தின் ஒப்பந்த மற்றும் தொகுப்பூதிய பணியாளராக இருத்தல் கூடாது.
- ஒரு சங்கத்திற்கு தேர்தல் அலுவலராக பணியமர்த்தம் செய்யப்படுபவர் அச்சங்கத்தின் தற்போதைய அல்லது முன்னாள் (is or was) பணியாளராக இருத்தல் கூடாது.
- பெருந்தண்டனைக்குரிய குற்றங்கள் பற்றிய (Major Penalties) ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை நிலுவையில் உள்ளவராக (Under disciplinary Proceedings and pending disposal) இருத்தல் கூடாது.

➢ மேற்காண் அறிவுரைகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்வரும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும் தெரிவிப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

# மாற்றுத்திறனுடையோர் கூட்டுறவு தேர்தலில் பங்கேற்றல் – சட்டத்திருத்தம் பிரிவு 34(1) (i)

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 540/2018/கூதே2, நாள் 04.11.2022**

**இதற்கு முன்னர்**

- பார்வை திறன் குறைபாடு உள்ளவர்களின் வேட்பு மனுவினை பரிசீலனையின் போது சட்டப்பிரிவு 34(1)(i)–ன்படி நிராகரிக்கலாம் என ஆணையத்தால் கூறப்பட்டிருந்தது.

**தற்போது பிரிவு 34 (1) (i) – ல் சட்ட திருத்தம்.**

- அரசிதழ் 83 நாள் : 30.01.2022–ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இத்திருத்தத்தின்படி பிரிவு 34(1)(i)–ல் சொல்லப்பட்ட தகுதியின்மை பார்வைக் குறைபாடு (Visually impaired) உடைய மற்றும் உடல் தகுதியின்மை (Physical disability) உள்ள நபர்களுக்கு (Persons) பொருந்தாது.
- எனவே வேட்பு மனு பெறுதல், பரிசீலித்தல், தள்ளுபடி செய்தல், ஏற்றுக் கொள்ளுதல் போன்ற வேட்பு மனு தொடர்பான நடவடிக்கைகளின் போது சட்டப்பிரிவு 34–ன் கீழ் நிர்வாக சபை சங்கத்தினர்களின் தகுதியின்மை பற்றிய இச்சட்டத்திருத்தத்தைக் கவனத்தில் கொண்டு செயல்படுமாறு தக்க அறிவுரைகள் வழங்கிட வேண்டும்.

# ஆணையத்தின் வலைத்தளம்

## www.coopelection.tn.gov.in

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 1265/2022/கூதே3, நாள் 14.11.2022**

- ஆணையத்தின் வலைத்தளம் www.coopelection.tn.gov.in தற்போது செயல்பாட்டில் உள்ளது.
- கூட்டுறவுத் தேர்தல் தொடர்பான முக்கிய சுற்றறிக்கைகள், கடிதங்கள், செய்தி வெளியீடுகள், தேர்தல் கையேடுகள் போன்றவற்றை இவற்றிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- ஒட்டுமொத்த தேர்தல் 2023–ன் தினசரி நடைபெறும் தேர்தல் விவரங்களை படிவ வடிவத்தில் பதிவேற்றிட ஏதுவாக ஆணையத்தின் வலைத்தளமான www.coopelection.tn.gov.in**–ல் MIS Portal** உருவாக்கப்பட்டு வருகிறது.
- MIS Portal, பதிவாளர் மற்றும் 15 செயற்பதிவாளர்களின் பயன்பாட்டுக்கு வரும் போது, இதன்வழியே தேர்தல் தொடர்பான படிவங்கள், வேட்புமனு தாக்கல், வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் போன்ற அனைத்து விபரங்களும் ஆணையத்தின் வலைதளப்பக்கத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

## தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களை சட்ட விதிகளுக்கு முரணாக மாற்றுதல்

### ஆணைய சுற்றறிக்கை ந.க.1285/2022/கூதே3, நாள் 16.11.2022

- தேர்தல் அறிவிப்பில் அறிவிக்கப்பட்ட இடங்களை எந்த சூழ்நிலையிலும் மாற்றுதல் கூடாது.
- தவிர்க்க முடியாத சூழலில் ஆணையத்தின் முன் அனுமதி பெற்று இடத்தை மாற்றலாம்.
- இம்மாற்றத்தினை சங்க வாக்காளர்கள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்தல் வேண்டும். (சங்க அறிவிப்பு பலகை, நாளிதழில் வெளியிடுதல் வேண்டும்).

## தேர்தல் நடவடிக்கைகளுக்கான காணொளித் தொகுப்பு மேற்கொள்ளுதல் (Video Coverage)

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 1389/2022/கூதே3, நாள் 08.12.2022**

தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட சங்கத்தின் தேர்தல் திட்டப்படியான தேர்தல் நடவடிக்கைகளில் அடியிற் குறிப்பிட்ட தேர்தல் நடவடிக்கைகள் கட்டாயமாக (Compulsory/Must) காணொளி தொகுப்பு செய்யப்பட வேண்டும்.

- வேட்பு மனுதாக்கல் (Filing of Nomination)
- பரிசீலனை (Scrutiny of Nomination)
- வாக்குப்பதிவு (Polling)
- வாக்கு எண்ணுகை மற்றும் முடிவு அறிவித்தல். (Counting and Declaration of Results)
- தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் நடவடிக்கை. (Election of President and Vice President)

- வாக்குப்பதிவு நடவடிக்கையின்போது வாக்காளர் வாக்களிக்கும் ரகசியம் (Secrecy of Voting) காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் அந்நிகழ்வு காணொளிப்படப் பிடிப்பிற்குட்பட்டதல்ல.

- இதற்காகும் செலவினை சங்கமே மேற்கொள்ள வேண்டும்.

- எடுக்கப்பட்ட காணொளி தொகுப்பு தேர்தல் ஆணையத்தின் ஒரு பகுதியாக கருதப்பட்டு (Deemed to be a part of election records) தேர்தல் ஆவணங்களுடன் தேர்தல் அலுவலரின் பொறுப்பிலும் பாதுகாப்பிலும் இருத்தல் வேண்டும்.

- தேர்தல் ஆவணமாக கருதப்பட்டுள்ள, சங்க நிர்வாக்குழு உறுப்பினர்கள் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான காணொளித் தொகுப்பு விதி எண் 52(22)(a) முதல் (c) வரையில் கூறப்பட்டபடியும், சங்க தலைவர்/துணைத் தலைவர் தேர்தல் தொடர்பான காணொளித் தொகுப்பு விதி எண் 53(13)(a) முதல் (c) வரை கூறப்பட்டபடியும் கையாளப்பட வேண்டும்.
- மேற்காணும் அறிவுரைகளை தங்களது நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்தலை உறுதி செய்ய வேண்டும்.

# வாக்குப்பெட்டிகள் பயன்படுத்துதல்.

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 1436/2022/கூதே5(2), நாள் 20.12.2022**

- வாக்குபெட்டிகள் வழங்குதல் குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்திட வேண்டி மாநில தேர்தல் ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

- மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers) அவர்களது கட்டுப்பாட்டிற்குட்பட்ட தேர்தல் நடைபெறும் சங்கங்களுக்கு தேவைப்படும் வாக்குப்பெட்டிகளை மாவட்ட நிர்வாகத்திடம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

# தேர்தல் தொடர்பான செலவினங்கள் – சங்கங்கள் மேற்கொள்ளுதல்

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 1462/2022/கூதே5, நாள் 28.12.2022**

- தேர்தல் தொடர்பான செலவினங்கள் அனைத்தையும் சங்கங்கள் எதிர்கொள்ளும் விதமாக தகுந்த நிதி ஆதாரங்கள் சங்கங்களில் இருப்பதை உறுதி செய்தல்.
- நிதி ஆதாரம் இல்லாத சங்கங்கள் தங்களுக்கு தேவையான நிதியினை அந்தந்த துறை தலைவர்களிடம் (Head of the Department) அணுகி பெற வேண்டும்.
- துறை தலைவர்கள் அரசிடம் உரிய கோரிக்கையை அனுப்பி சங்கங்களுக்கு தேவையான நிதியை பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

# பார்வையாளர்கள் (Observers) அதிகார எல்லை (Jurisdiction) நிர்ணம் செய்தல்

**ஆணைய சுற்றறிக்கை ந.க.எண் 875/2022/கூதே1, நாள் 06.01.2023**

- தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் பார்வையாளராக 1988–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் விதி எண் 52–A(6)ன் கீழ் ஒரு அரசு அதிகாரியை ஆணையம் நியமனம் செய்கிறது.
- இவ்வாறு விதி எண் 52–A(6)ன் கீழ் நியமனம் செய்யப்படும் பார்வையாளர் அவ்விதியில் சொல்லப்பட்டபடி ஒரு மாவட்டம் அல்லது ஒரு வருவாய் கோட்டம் (Revenue Division) அல்லது வருவாய் கோட்டத்தின் ஒரு பகுதியில் உள்ள ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது ஒரு தொகுப்பு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் அல்லது தேர்தல்கள் (a Co–operative society or a group of Co–operative societies) நடைபெறுவதை கண்காணிக்கும் ஒரு அரசு அதிகாரியாக இருப்பார்.

- தேர்தல் ஆணையத்தால் அவரிடம் ஒப்படைத்த பொறுப்பு மற்றும் அத்தகைய இதர செயல்பாடுகளை அவர் செயல்படுத்துதல் வேண்டும்.
- கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் (Free, Fair and Transparent) ஆணையம் சிறப்புற நடத்திட பார்வையாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

- ஒரு மாவட்டத்திலுள்ள அனைத்து சங்கங்களுக்கும் ஒரு பார்வையாளர் என்ற தற்போதைய நிலையினை மாற்றி 52-A(6)-ல் கூறப்பட்டபடி ஒரு வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒரு பார்வையாளர் நியமனம் செய்ய உத்தேசித்து அதன்படி ஒரு மாவட்டம் மற்றும் அதற்குட்பட்ட வருவாய் கோட்டங்களை பார்வையாளர்களின் அதிகார வரம்புக்கான எல்லையாக (Jurisdiction) நிர்ணயம் செய்து விதி எண் 52-A (9)-ன் கீழ் ஆணையம் ஆணையிட்டுள்ளது.
- இவ்வாறாக தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களுக்குட்பட்ட 94 வருவாய் கோட்டங்களுக்கு 94 பார்வையாளர்கள் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட உள்ளனர். மேலும், பார்வையாளர்களாக நியமனம் செய்யப்படுபவர்கள் விதி எண் 52-A(5) மற்றும் 52-A(6) மற்றும் அதில் கூறப்பட்ட விளக்கத்திற்கும் (Explanation) உட்பட்டவர்களாவர்.

## கல்வித்துறையின் பங்களிப்பு

ஆணைய கடிதம் ந.க.134/2023/கூதே3, நாள் 25.01.2023

கூட்டுறவுச் சங்க தேர்தலுக்கு பள்ளிக் கட்டிடங்கள் தேவைப்படும் பட்சத்தில் அதனை கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் (District Election Officers) மாவட்ட அளவிலான மாவட்ட கல்வி அலுவலர்கள்(District Education Officers) மற்றும் முதன்மை கல்வி அலுவலர்களை அணுகி பெறுதலையும், இது குறித்து மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மை கல்வி அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்கிட அரசு முதன்மை செயலாளர் மற்றும் பள்ளிக்கல்வி துறை ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

# <u>தேர்தல் புகார் மனு பதிவேடு</u>

## <u>Register for Election Complaint Petitions</u>

ஆணைய சுற்றறிக்கை ந.க.1111/2022/கூதே5, நாள் 11.01.2023

இது தொடர்பாக கீழ்க்காணும் அறிவுரைகளை ஆணையம் வழங்குகிறது

- தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக பெறப்படும் புகார் மனுக்களுக்கு தனியே ஒரு பதிவேடு (Register for Election Complaint Petitions) பேணப்பட வேண்டும்.
- அப்பதிவேடு கீழ் கண்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

# தேர்தல் புகார் மனு படிவம்

**படிவம் (FORMAT)**

**தேர்தல் புகார் மனு பதிவேடு (REGISTER FOR ELECTION COMPLAINT PETITIONS)**

**துறையின் பெயர்:**

| வ. எண் (S. No.) | தேதி (Date) | மாவட்டம் (District) | சங்கத்தின் பெயர் (Name of the Society) | புகார்மனு தாரரின் பெயர் மற்றும் முகவரி (Name and Address of the Petitioner) | புகாரின் சுருக்கம் (Brief note about Petition) | நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் (Action taken Report) | முடிவின் தன்மை (Nature of Conclusion) | தன் பதிவேடு எண் (PR No.) | குறிப்பு (Remarks) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

- படிவத்தில் உள்ளபடி ஒரே மாதிரியாக தேர்தல் புகார் மனு பதிவேடானது (Register for Election complaint petitions) தேர்தல் ஆணையம், அனைத்து மாநில தேர்தல் அலுவலர்கள், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் அனைத்து தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் தங்கள் அலுவலகங்களில் வைத்து முறையே பராமரித்தல் வேண்டும்.
- தேர்தல் புகார் மனு மீது உடனுக்குடன் நடவடிக்கையினை எடுத்து முடிவினை மனுதாரருக்கு தெரிவித்திட வேண்டும்.
- இந்த தேர்தல் புகார் மனு பதிவேடு தேர்தல் ஆணையத்தின் ஒரு ஆவணமாக கருதப்பட்டு தேர்தல் ஆவணமாக (Election Records) தேர்தல் அலுவலரின் பொறுப்பில் பாதுகாப்பாக பராமரிக்கப்பட வேண்டும்.

# ஆணைய சுற்றறிக்கை
# ந.க.எண் 1111/2022/கூதே5, நாள் 10.01.2023

வேட்புமனு பரிசீலித்தல், நிராகரித்தல் போன்ற வேட்புமனு தொடர்பான கீழ்கண்ட சுற்றறிக்கைகள் தக்க நடவடிக்கைக்காக மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

- ஆணையத்தின் கடிதம் ந.க.321/2018/கூதே1, நாள் 19.07.2018
- ஆணையத்தின் கடிதம் ந.க.1111/2022/கூதே5, நாள் 20.10.2022

# ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூதே1(1)(2), நாள் 11.01.2023

- பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டு துறைக்கு புதிய மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டது.
- சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு புதிதாக பிரிக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டது.

# ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூதே1(3), நாள் 11.01.2023

- தொழில் வணிகத்துறையில் மாவட்ட தேர்தல் அலுவலர்ககளுக்கான மாற்று நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. அவை:

❖ திருப்பூர் பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம்.

❖ நீலகிரிக்கு இணை இயக்குநர் (IC) (தேயிலை).

# ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூதே1(4), நாள் 11.01.2023

- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப்பணிகள் துறையில் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அவை

- கள்ளக்குறிச்சி,இராணிப்பேட்டை,செங்கல்பட்டு மாவட்ட திட்ட அலுவலர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்களாக நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- ஆணையத்தால் ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில தேர்தல் அலுவலர் அல்லது மாவட்ட தேர்தல் அலுவலர்கள் ஆகியோரின் நியமனங்களில் ஏதேனும் மாற்றம் தேவைப்படுமாயின் அவற்றை ஆணையத்திற்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# மாநில தேர்தல் அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்

- கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் நடத்துவது குறித்து அனைத்து துறையைச் சார்ந்த மாநில தேர்தல் அலுவலர்களுக்கான கூட்டமானது ஆணையத்தில் 05.01.2023, 06.01.2023 மற்றும் 09.01.2023 ஆகிய தேதிகளில் ஆணையரால் நடத்தப்பட்டது.
- தேர்தல் தொடர்பான முன்னேற்பாடுகள் மற்றும் ஆணையத்திற்கேற்பட்ட சட்டபூர்வ கட்டளைப்படி, (Statutorily mandated) தேர்தல்களை நடத்த வேண்டியுள்ளது பற்றியும், அவ்வகையில் உறுப்பினர் பட்டியல்களை சரி செய்தும், இதர வகையிலும் அனைத்து வகை ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தயார்நிலையில் இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டது.

# மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான மண்டல அளவிலான ஆலோசனைக் கூட்டம்

- தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டங்கள் ஆணையரால் **மதுரை, திருச்சி, சென்னை, கோயம்புத்தூர்** ஆகிய 4 மண்டலங்களில் முறையே 19.01.2023, 20.01.2023 மற்றும் 24.01.2023 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.
- இக்கூட்டங்களில் கலந்து கொள்ளாத மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான சிறப்பு கூட்டமானது 02.02.2023 அன்று சென்னையில் நடத்தப்பட்டு, தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

# வெளியீடுகள்

- தேர்தல்கள் நடத்துவது தொடர்பாக புதிய கூட்டுறவுச் சட்ட விதிகள் உருவாக்கப்பட்டிருந்ததாலும் தேர்தல்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும் (Free and Fair) சட்டபூர்வமாகவும் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து தேர்தலில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் பயன்படும் வகையில் பல்வகை கையேடுகளும் சுற்றறிக்கை தொகுப்புகளும் ஆணையத்தால் வெளியிடப்பட்டன.

# ஆணையம் வெளியிட்ட கையேடுகள்

| வ.எண் | கையேடுகள் விபரம் |
|---|---|
| 1 | தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான கையேடு 2013 |
| 2 | தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு 1 |
| 3 | வாக்காளர் பட்டியல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு 2 |
| 4 | தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு 3 |
| 5 | தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு 4 |
| 6 | தேர்தல் அலுவலர்களுக்கான துணைக் கையேடு 5 |
| 7 | கூட்டுறவுகளை ஜனநாயகப்படுத்துதல் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலை நோக்கி |
| 8 | அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொகுப்பு |
| 9 | அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொகுப்பு – தொகுதி – 2 |
| 10 | கூட்டுறவு தேர்தல்கள் – புள்ளியியல் தகவல் |

# ஆணையம் வெளியிட்ட கையேடுகள்

| வ.எண் | கையேடுகள் விபரம் |
| --- | --- |
| 11 | தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு – 2018 |
| 12 | தேர்தல் பார்வையாளர்களுக்கான கையேடு – 2023 |
| 13 | மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு – 2023 |
| 14 | தேர்தல் அலுவலர்களுக்கான கையேடு – 2023 |
| 15 | வேட்பு மனுக்கள் – துணைக்கையேடு 1 |
| 16 | வாக்காளர் பட்டியல் – துணைக்கையேடு 2 |
| 17 | வாக்குப் பதிவு – துணைக்கையேடு 3 |
| 18 | வாக்கு எண்ணுகை – துணைக்கையேடு 4 |
| 19 | தலைவர்/துணைத்தலைவர் தேர்தல் – துணைக்கையேடு 5 |
| 20 | வேட்பாளர் கையேடு |

# நன்றி